## தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044– 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

**முன்னிலை : மு. மாலிக் பெரோஸ் கான், இ.ஆ.ப., (ஓ)**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

**ஆணை எண்: 208/மா/2023**
**நாள் : 23.08.2023**

திரு. N. தமிழரசு,
சென்னை–600 097. – முறையீட்டு மனுதாரர்

மண்டல அலுவலர்,
மண்டலம்–15,
பெருநகர சென்னை மாநகராட்சி. – எதிர்மனுதாரர்

பெருநகர சென்னை மாநகராட்சி, OMR, மேட்டுக்குப்பம், பிள்ளையார் கோயில் தெரு, எண்.3/752, என்ற முகவரியில் வசிக்கும் திரு. N. தமிழரசு என்பவரின் 13.12.2022 நாளிட்ட மனு 14.12.2022 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் பெறப்பட்டு, 208/மா/2023 எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலனை செய்யப்பட்டு, கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

<u>ஆணை</u>

பெருநகர சென்னை மாநகராட்சி, OMR, மேட்டுக்குப்பம், பிள்ளையார் கோயில் தெரு, எண்.3/752, என்ற முகவரியில் வசிக்கும் திரு. N. தமிழரசு, என்பவரின் முறையீட்டு மனுவில் கீழ்கண்டவாறு தெரிவித்துள்ளார் :

I had made an online Complaint vide No.2022-472 ALS dated 18/10/2022 extract of the same is "At ward No.195, in OMR Service Road some of them put up Trolly Shops, Protable Shops and Flower Shops on the platform which are inconveniently blocking public access and this platform would be almost impossible to use because of the crowds caused by those shops. Food item also unhygienic specifically food or not follow in preparation and consumption of food safety standards no safety measures follow The said location is the main road and there are lots of vehicles moving down that road, so it is very difficult for the public to use the way frequently. Also, they have ruined the place, so the platform looks absolutely terrible. Therefore, I request you to dispose of those shops and make for public use, I herewith attached a photocopy of the shops as evidence."

As a result of the above-mentioned complaint, on 25.10.2022 the Assistant Engineer, Division 195 forwarded it to the Asst. Executive Engineer II – Zone XV and the same was replied on 28.10.2022 as follows.

"The Metro water work is under progress, after completing of pipeline work the patch work to be attended.

"However, my complaint is about encroachment of the public pathway for personal gain and the Asst. Executive Engineer II – Zone XV has responded with irrelevant information in order to close my complaint.

Therefore, I sent the above complaint on 29.10.2022 to the said respondents but so far no action has been taken for my complaint. Therefore, I request you to direct them to take necessary action on my complaint.

Further, I request you take appropriate action against the respondents for not taking action on my complaint within the time frame.

**மேற்கண்ட புகார் மனுவின் மீதான அறிக்கையை அனுப்புமாறு, பெருநகர சென்னை மாநகராட்சியின் மண்டலம்-15ன் மண்டல அலுவலரிடம் 1.2.2023 மற்றும் 27.07.2023 நாளிட்ட கடிதங்களில் கோரப்பட்டது.**

**பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம்- 15ன் மண்டல அலுவலர் 3.8.2023 நாளிட்ட தனது அறிக்கையில்:-**

பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் - 15, பகுதி-45, கோட்டம் -195ல் – ராஜீவ்காந்தி சர்வீஸ் சாலையில், (OMR Service Road) தள்ளுவண்டி, பூக்கடை (Flower Shop) ஆக்கிரமிப்புகளை அகற்றுமாறு திரு. தமிழரசு அவர்கள் 13.12.2022 அன்று தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் புகார் அளித்துள்ளார்.

ராஜீவ் காந்தி சாலை (OMR) தமிழ்நாடு சாலை மேம்பாட்டு நிறுவனத்தினரால் (TNRDC) உருவாக்கப்பட்டு, பராமரிக்கப்பட்டு வருகிறது. இந்த சாலையானது பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான சாலை அல்ல; அதே சமயம் பராமரிக்கப்படவும் இல்லை. மேலும், மனுதாரர் குறிப்பிட்டபடி, பெருநகர சென்னை மாநகராட்சியால் அளிக்கப்பட்ட புகாரின் பதிலான "சென்னை குடிநீர் Pipe புதைக்கும் பணி முடிந்தவுடன் சாலைகளின் வெட்டுகளை சீரமைக்கப்படும்..." என்ற தவறான பதிலுக்காக பெருநகர சென்னை மாநகராட்சியானது இந்த முறை மன்றத்தில் மன்னிப்பு கேட்டுக்கொள்கிறது.

OMR சாலையானது TNRDC என்ற நிறுவனத்திற்கு சொந்தமானதால், TNRDC என்ற நிறுவனமே ஆக்கிரமிப்புகளை அகற்ற வேண்டும் என்பதால் OMR சாலைகளில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்ற 07.02.2023 அன்றும் மற்றும் 08.03.2023 அன்றும் பெருநகர சென்னை மாநகராட்சி TNRDC நிறுவனத்திற்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது என பணிவுடன் தெரிவித்து கொள்ளப்படுகிறது.

**2. இம்மனு தொடர்பாக மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோரை 07.08.2023 அன்று நேரடி விசாரணைக்கு வருமாறு 27.07.2023 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன:**

மனுதாரர் 7.8.2023 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்:

பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 15ல் உள்ள O M R சர்வீஸ் சாலையில் உள்ள நடைபாதையை ஆக்கிரமித்து பூக்கடை, உணவகங்கள் போன்ற சிறு சிறு கடைகள் தோன்றியுள்ளதால், மேற்கண்ட நடைபாதையை மக்கள் உபயோகிப்பதில் சிரமப்படுகின்றனர். எனவே மேற்கண்ட நடைபாதையில் உள்ள கடைகளை அகற்றக் கோரி மாநகராட்சியில் புகார் மனு அளித்தும் இதுவரை எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. எனவே, மேற்கண்ட சாலையில் இட ஆக்கிரமிப்பு செய்து உருவாகியுள்ள கடைகளை அகற்ற ஆவன செய்யுமாறு இம்முறை மன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் எனது 13.12.2022 நாளிட்ட மனுவில் கண்டுள்ள விவரங்களையும் எனது மேல் வாக்குமூலமாக எடுத்துக்கொள்ளும்படி இம்முறை மன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்.

**3. பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 15–ன் உதவிப் பொறியாளர் 07.08.2023 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்:**

"பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 15 ராஜீவ் காந்தி சர்வீஸ் சாலையில் உள்ள சிறு சிறு கடைகளை அகற்றுமாறு மனுதாரர் புகார் மனு அளித்ததைத் தொடர்ந்து அங்கு ஆய்வு செய்யப்பட்டது. மேற்கண்ட சாலையானது தமிழ்நாடு சாலை மேம்பாட்டு நிறுவனத்தால் பராமரிக்கப்பட்டு வரும் நிலையில், தமிழ்நாடு சாலை மேம்பாட்டுப் நிறுவனத்துடன் மாநகராட்சி அலுவலர்கள் இணைந்து மேற்கண்ட ஆக்கிரமிப்புக் கடைகளை வேறு இடத்திற்கு மாற்ற தேவையான நடவடிக்கை எடுக்கப்படும் என்கின்ற விவரத்தை இம்முறை மன்றத்தில் சமர்ப்பிக்கிறேன்.

மேலும், மண்டல அலுவலர் 15 அவர்களின் 3.8.2023 நாளிட்ட கடிதத்தில் கண்டுள்ள விவரங்களையும் எனது மேல்வாக்குமூலமாக எடுத்துக்கொள்ளும்படி இம்முறை மன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்" எனத் தெரிவித்துள்ளார்.

**4. முறையீட்டு மனுதாரரின் மனு, வாக்குமூலம், பெருநகர சென்னை மாநகராட்சியின் மண்டலம் – 15ன் மண்டல அலுவலரின் அறிக்கை மற்றும் உதவிப் பொறியாளரின் வாக்குமூலம் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன. பரிசீலனையில் பின்வரும் விவரங்களை அறிய முடிகிறது :**

மனுதாரர் வார்டு 195 OMR Service Road ஆக்கிரமித்து தள்ளுவண்டி, பூக்கடை, சிறு கடைகள் நடத்தி வருகின்றனர் என்றும் இதனால் பொது மக்கள் சிரமப்படுகின்றனர் என்றும், மக்கள் அச்சாலையில் நடந்து செல்ல முடியாத சூழ்நிலை உள்ளதாகவும், இது குறித்து பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் - 15ற்கு புகார் மனு அளித்தும் நடவடிக்கை எடுக்கவில்லை என்பதால், தன் மனு மீது உரிய விசாரணை மேற்கொண்டு, நடவடிக்கை எடுக்குமாறு கோரியுள்ளார்.

5. மனுதாரர் குறிப்பிட்ட OMR சாலை தமிழ்நாடு மேம்பாட்டு நிறுவனத்தால் பராமரிக்கப்பட்டு வருவதாகவும், பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான சாலை இல்லை எனவும், இருப்பினும் தமிழ்நாடு மேம்பாட்டு நிறுவனத்துடன் மாநகராட்சி அலுவலர்கள் இணைந்து அங்குள்ள ஆக்கிரமிப்புக் கடைகளை வேறு இடத்திற்கு மாற்ற தேவையான நடவடிக்கை எடுக்கப்படும் என்று பெருநகர சென்னை மாநகராட்சி மண்டல அலுவலர்-15ல் அறிக்கையிலும், உதவிப்பொறியாளர் வாக்குமூலத்திலும் தெரிவித்துள்ளார்கள்.

6. ஒரு சாலையில் சிறு வியாபாரிகள் தள்ளுவண்டி கடை மற்றும் பூக்கடை அமைப்பதற்கு தமிழ்நாடு அரசு இதழ் எண்.230 நாள்: 2.11.2015 (G.O. Ms. No.159, MAWS (MA.IV)Dept., Dated 2.11.2015)ல் தெளிவாக வழிவகைகளை அறிவித்துள்ளது அவற்றில் சில :–

3. **Survey of Street vendors** :–

(1) The survey of street vendors shall be done in-situ for the existing vendors only and no survey shall be carried out by calling for particulars from the vendors by announcements.

(2) The survey of street vendors shall be carried out by the Town Vending Committee and completed within a period of six months from the date on which the Scheme is notified.

(3) The respective Town Vending Committee shall, with the assistance of the staff placed at its disposal by the concerned local authority, carry out the survey. For this purpose, the Executive Authority of the local authority, shall depute its staff to assist the said committee.

(4) The survey team shall proceed to enumerate the street vendors in a vending zone and shall record the details in Form-1.

(5) Only those of the vendors who are found to be actually carrying on business in the streets shall be entitled to be enumerated.

4. **Certificate of Vending** :-

(1) The Town Vending Committee shall within a period of sixty days from the date of completion of survey of street vendors in a Ward or Zone of a local authority, issue the Certificate of Vending to each street vendor identified in the survey. The Certificate of Vending shall be issued by the Town Vending Committee concerned in Form-II.

(2) A person who wish to carry on street vending during the intervening period of two surveys may make an application to the Town Vending Committee in Form III which shall be disposed of by the Town Vending Committee within a period of sixty days from the date of its receipt.

6. **Classification of vendors**:-

For the purpose of issue of Certificate of Vending, the vendors shall be generally categorized as follows:-

**(i) Stationary vendors:-** Persons carrying on vending business in articles or goods in a particular place who carry the articles or goods and the pallets or other implements used by them for vending by human effort of not more than one person.

**(ii) Mobile vendors:-** Persons carrying on vending business using hand pulled or pedal powered vehicles not coming within the purview of the Motor Vehicles Act, 1988 (Central Act 59 of 1988) and for which no licence to operate is required under any other law for the time being in force.

**(iii) Mobile vendors using motor-vehicles:** Persons carrying on vending business using motor vehicles of any description, the operation or movement of which requires a licence under the Motor Vehicles Act. 1988 (Central Act 59 of 1988) of any other law in force.

**(iv) Other categories of Vendor:-** The Town Vending Committee concerned shall also identity other categories of street vendors such as vendors in weekly markets. heritage markets. festival markets and night bazzars as may be doing business within the said Committee's jurisdiction and shall provide for the integration of such vendors or for a separate facility for such vendors to enable them to continue their business.

**7. Identity card:-**

An identity card shall be issued by the Town Vending Committee to each street vendor in Form-IV which is enabled to carry the biometric particulars of the street vendor.

**10. The validity of the Certificate of Vending:-**

The Certificate of Vending shall be valid for a period of 5 years from the date of issue of until the next enumeration of vendors whichever is earlier.

**13. Relocation of street vendors:-**

(1) In case of relocation of street vendors under sub-section (1) of section 18 of the Act, it shall be subject to the following conditions, namely:-

a. The relocation shall be done with the concurrence of the Town Vending Committee concerned.

b. As far as possible, the vendors shall be allotted locations in an adjoining area of equal or similar nature and importance as the original place.

c. Insofar as possible, the density of the vendors in the new area shall be maintained.

d. The relocation shall be insofar as possible, in the same locality or area as is commonly identifiable.

(2) In case, the conditions specified above are not possible to be complied with, the relocation shall be done with the concurrence of the Town Vending Committee, recording the reasons for such departure from the above conditions.

(3) In case the relocation is not possible in compliance of the conditions specified in sub-clause (1) and in case the vendors concerned either individually or as a group refuse to move or relocate, their Certificate of Vending shall be cancelled and they may be offered vending locations in other areas within the ward, zone or city and fresh Certificate of Vending shall be issued to them by the Town Vending Committee concerned. Such vendors shall form a special category of preferential vendors under this Scheme.

**14. Manner and method of eviction of vendors, seizure and disposal of goods:-**
(1) A street vendor, whose Certificate of Vending is cancelled under section 10 of the Act or who vends without a certificate of vending or who vends or who vends in a no-vending zone

shall be liable to be evicted immediately from his place of vending and his vending articles and goods shall be seized by the local authority and kept in its custody.

7. பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் - 15ன் மண்டல அலுவலரின் அறிக்கை மற்றும் வாக்குமூலத்தில் தெரிவித்தவாறு தமிழ்நாடு சாலை மேம்பாட்டு நிறுவனத்துடன் இணைந்து OMR சாலையை ஆக்கிரமித்து சிறு வியாபாரிகள், கடைகள் அமைத்துள்ளதை, மேற்கண்ட அரசிதழில் கண்டுள்ள வழிகாட்டுதல்களின்படி பொதுமக்கட்கு அச்சாலையில் எவ்வித இடையூறும் ஏற்படா வண்ணம் உரிய நடவடிக்கை எடுக்குமாறு பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையருக்கு இம்முறைமன்றம் அறிவுரை வழங்கி ஆணையிடுகிறது.

2023–ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 23–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

1. திரு. N. தமிழரசு,
   வழக்கறிஞர்,
   எண்.3/752, பிள்ளையார் கோவில் தெரு,
   மேட்டுக்குப்பம் (OMR) சென்னை – 600 097.
2. மண்டல அலுவலர்,
   மண்டலம்–15, பெருநகர சென்னை மாநகராட்சி,
   120, ராஜீவ் காந்தி சாலை, சோளிங்கநல்லூர்,
   சென்னை – 600 119.
3. அரசு முதன்மைச் செயலாளர் / ஆணையாளர்,
   பெருநகர சென்னை மாநகராட்சி,
   ரிப்பன் மாளிகை, சென்னை – 600 003.
4. கண்காணிப்பு பொறியாளர்,
   மழைநீர் வடிகால்துறை,
   ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer),
   பெருநகர சென்னை மாநகராட்சி,
   ரிப்பன் மாளிகை, சென்னை – 600 003.
5. தமிழ்நாடு சாலை மேம்பாட்டுக் கழகம்,
   எண்.735, அண்ணா சாலை,
   நான்காவது தளம், LLA Building,
   சென்னை – 600 002.

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சென்னை–600 032

நகல்.

மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்
இகோ/உதிரிகள்

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

செயலாளர்